# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 71 — 1973 අගෝස්තු 03 වැනි සිකුරාදා — 1973.08.03

71 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ) — விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 783 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | 789 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 790 | ஏலவிற்பனைகள் | 791 |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் | — | நானாவித அறிவித்தல்கள் | — |


*கவனிக்க.—மக்கோனைப் பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலமும், இலங்கைக் குட்டநோய்த் தடுப்புச் சங்கம் சட்டமூலமும், இலங்கைப் பொது வைத்தியர்கள் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

# ✓ கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

வாழைச்சேனையிலுள்ள கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கு பின்வரும் பல்ப் பொருட்களை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன :—

1. பிளீச்ற் சல்பைற் பல்ப்—2,000 மெற்றிக் தொன்கள்.
2. பிளீச்ற் சல்பேற் பல்ப்—3,000 மெற்றிக் தொன்கள். (கிருப்ற்)

கேள்விப் பத்திரங்கள் 1973, செப்தெம்பர் மாதம் 6 ம் திகதி பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

பொறுப்பு முதல்வர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்களைக் கொடுத்து எழுத்து மூலம் விண்ணப்பம் செய்து கேள்விப்பத்திர படிவங்களையும் மற்றும் ஏனைய விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

த. பெ. 1367,
356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1973.07.17.

7-113—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

### ✓ சிறு கைத்தொழிற்றிணைக்களம்

மொறட்டுவை, வெலோறுவில் வெண்மையாக்கும் தொட்டியொன்றமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத்தலைவரால் 1973.08.23 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்தில் கட்டிட வேலைக்கென ரூபா 15,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைக் கொண்ட வேலைகட்கெனத் தம்மைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 50 ஐ வைப்புப் பணமாக இந்தத் திணைக்களத்தில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1973.08.22 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

சோமபால குணதிர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழிற்றிணைக்களம்.

தொடர் இல: 3/1—(1-56)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.07.23.

7-67—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

**இலங்கைப் போக்குவரத்துச் சபை**

கொழும்பு 5, நாராகேன்பிட்டி, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி புதன்கிழமை மு. ப. 10.00 மணி வரை பின்வரும் வேலைக்காக வேறுன பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

**விவரணம்**

வத்துமுல்லை புதிய சாலையில் மின் அமைப்பு வேலை

வெரகெரையிலுள்ள மின் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும் இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக்கொள்வதுடன், இவரின் அலுவலகத்தில் படவரைவுகளையும் பரிசீலனை செய்யலாம். ரூபா 2,00,000 தொகைக்குக் குறையாத மின் பொறி வேலைகளுக்கு இ.போ.ச. வில் அல்லது அரசாங்க திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தேவையான கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 200 க்கான கேள்விப்பத்திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டையும் மீளளிக்கப்படமாட்டாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 25 க்கு ஆன பற்றுச்சீட்டையும் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பிரதம மெக்கானிக்கல் பொறியியலாளருக்கு காட்டுவதன்பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களது சான்றோலைகளைப் பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றோலைகள் மின் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப் பட்டபின், கேள்விப்பத்திரக் கட்டுப்பணத்தை காசாக மாத்திரம் இ.போ.ச. பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள இ.போ.ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

பிரதம மெக்கானிக்கல் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

மெக்கானிக்கல் பொறியியல் பகுதி,
வெரகெரை, பொரலஸ்கமுவை.

2–227—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

**காணி ஆணையாளர் திணைக்களம்**

அனுராதபுர மாவட்டத்தில் பின்வரும் கட்டுவேலைகள் செய்வதற்காக கொழும்பு, த. பெ. இல 500, காணி ஆணையாளர் திணைக்களத்திற் கேள்விச் சபைத்தலைவரால் 31.08.73 ந் திகதி பி. ப. 2.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலைவிபரம் | தேவையானபதிவு (ரூபா) |
|---|---|
| (1) தேவகூவ குடியேற்றத்திட்டத்தில் புதுகேகின்ன பான்சாலை வீதியிலிருந்து வித்தியாசாலை வரையுமான வீதி. | 50,000 |
| (2) காணிக்கொமிசனர் இலாகா சாரதிகள் இளைப்பாறும் இடம் (அனுராதபுரம்) | 30,000 |

2. மேலேயுள்ள விபரங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள பணமும் அதற்கு மேலும் பெறுமதியான அரசாங்க திணைக்களங்களில் பதியப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களும் தொழிற் சங்கங்களும் அனுராதபுர கச்சேரியில் 27.08.73 ந் திகதி பி. ப. 1.00 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விக்காரர்களுக்கு கேள்விப்பத்திரம் வழங்குவதற்கு முன்பு அனுராதபுர கச்சேரியில் 100 ரூபாவை வைப்புப்பணமாகச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டொன்றை அனுராதபுர அரசாங்க அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிக்கப் பெற்ற சங்கங்கள் கேள்விப்பத்திரங்களுக்கு பணம் செலுத்துவதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன. காசோலை, காசுக்கட்டளை, தபால் கட்டளைகள் மூலம் பணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரத்தையுடைய தபாலுறை சீலிடப்பட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரம் கொடுக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படாது விடப்படுமிடத்து கொழும்பு, காலிமுகத்திடல், செயலகத்திலுள்ள 323 ம் இலக்க அறையில் இடப்படுதல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் 03.09.1973 ந் திகதி பி. ப. 2.00 மணிக்கு மேற் கூறப்பட்ட இடத்தில் உள்ள 320 ம் இலக்க அறையில் இடப்படுதல் வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தங்கள் கேள்விப்பத்திரம் தெரிவுசெய்யப் பட்டதன் காரணமாக அறிவித்தல் கிடைத்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளாவிடின் அல்லது ஏற்க மறுப்பின் அல்லது அதற்கு வேண்டிய வைப்புப்பணத்தை செலுத்தாவிடின் அன்னாரின் கேள்விக்கட்டுப்பணம் அரசாங்கத்திற்குரியதாக்கப் படும். அனுமதியளிக்கப்பட்ட தொழிலாளர் சங்கங்கள், ப. நோ. கூ. சங்கங்கள், கி. மு. சங்கங்கள் வேலை பாரமெடுக்குமிடத்து பிணைப்பணம் கட்டுவதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன.

7. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரினால் அறிவிக்கப்படும் விலாசத்திற்கு பதிவு செய்த தபாலில் கேள்வி ஏற்றுக்கொள்ளப் பட்டதென அறிவித்தாலோ, அல்லது வேறு முறையில் அவ்விலாசத்திற்கு அறிவித்தாலோ ஒப்பந்தக்காரருக்கு அது கிடைத்ததென கருதப்படும்.

8. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் வேலை செய்வதற்காக பயிற்றப்பட்டதும், பயிற்றப்படாததுமான வேலையாட்களை நியமித்தல் வேண்டும். அவ்வேலையாட்கள் கூடிய பக்கம் அந்தந்த வேலை செய்யும் தொகுதியிலிருந்து தெரிவு செய்து வேலைக்கமர்த்த வேண்டும்.

9. கொந்தராத்துக்காரர் குறிப்பிட்ட நிபந்தனைகள் எவற்றையேனும் சரியாக நிறைவேற்றத் தவறின் அன்னாரின் ஒப்பந்தம் ரத்து செய்வதற்கு ஏதுவாகும். இருந்தும் விசேடமாக ஒப்பந்தம் செய்த அதிகாரி ஒப்பந்தக்காரர் இலங்கையர்களை வேலைக்கு அமர்த்த இருப்பின் காணி விவசாய அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் எழுத்து மூலம் பெற்ற அனுமதியுடன் அவ் ஒப்பந்தத்தை தொடர்ந்து செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும்.

10. இலங்கையரல்லாத வேலையாட்களை அனுமதியின்றி வேலைக்கமர்த்தி இருப்பின் ஒப்பந்தத்தை மீறி நடந்த குற்றமாக கருதப்படும்.

11. இவ் ஒப்பந்தத்தில் இலங்கையர் என்பது இலங்கை வம்சாவழியில் உள்ளவர்கள் அல்லது இலங்கையராகப் பதிவு செய்யப் பட்டவர்களேயாகும்.

12. ஒப்பந்தக்காரர் இவ்வொப்பந்தத்தின் பிரகாரம் தனது அதிகாரத்தின் கீழ் வேலை செய்யும் எந்தப்பகுதி ஊழியர்கட்கும் தற்போது நடைமுறையிலிருக்கும், இனிமேல் நடைமுறைக்கு வரும் சம்பள வீத சட்டத்திற்கமைய வேதனம் அளிக்கப்படவேண்டும்.

13. ஒப்பந்தக்காரர் காணி ஆணையாளர் திணைக்களத்தில் உள்ள இவ்வேலைக்காக காணி ஆணையாளரிடமிருந்து அனுமதி பெற்ற அதிகாரிகள் எவரையேனும் எந்த நேரத்திலும் அவ் வேலை சம்பந்தமாக உள்ள கணக்குப் புத்தகங்கள், இடாப்புகள், வேலைப்பதிவேடுகள், மற்றும் இதுசம்பந்தமாக உள்ள வேலைக்குப் பாவிக்கப் படும் புத்தகங்களைப் பார்ப்பதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

14. இதனைப்பற்றி வேறுவிபரங்கள் அறிய விரும்பின் அரசாங்க அதிபர், அனுராதபுர மாவட்டம் அவர்களிடமிருந்து மனுச் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. பி. வன்னிநாயக்கா,
(உதவி அரசாங்க அதிபர்)
அரசாங்க அதிபருக்காக,
அனுராதபுர மாவட்டம்.

அரசாங்க செயலகம்,
அனுராதபுரம்,
1973 ம் ஆண்டு யூலை 20 ந் திகதி.

7–35—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

### அரசாங்கக் கேள்விகள்—கடற்றொழில் திணைக்களம்

பின்வரும் வேலைகளைச் செய்வதற்கான கேள்விகளைக் கடற்றொழில் இயக்குநர், 1973-08-17 ந் தேதி காலை 10.30 மணிவரை ஏற்றுக்கொள்வார் :—

(1) மீன்பண்ணையியலாளர் அகங்களை அமைத்தற்கு.

(2) கடற்றொழில் பரிசோதகர்கள் அகங்களை அமைத்தற்கு.

(3) இரு காவலாளர்களுக்கு அகங்களை அமைத்தற்கு.

(4) சீமேந்து மீன் தொட்டிகளையும், இறைற்றையும், நீர்ச் சிகரத்தையும் கட்டுவதற்கு.

(5) அலுவலகம், ஊர்திச்சாலை, களஞ்சியங்களை அமைத்தற்கு.

கேள்விப் படிவங்களை, கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள, கடற்றொழில் திணைக்களத்தின் தாபனக் கிளையிலிருந்து ஒவ்வொரு வேலைக்கும் வைப்புப் பணமாக ரூபா 100 ஐச் செலுத்தி 73-08-16 ந் திகதி நண்பகல் 12 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3, 1973-07-24

8-244—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

இல. : இப/260 (72/73)

### காலிக் கச்சேரி—கேள்விப்பத்திரம் சம்பந்தமான அறிவித்தல்

காலி மாவட்டத்திலே, கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பு வேலைகளுக்கு 1973, ஒகத்து மாதம் 31 ந் தேதி பி. ப. 2.00 மணிவரை காலி அரசாங்க அதிபரினால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது அவைகளைச் சமர்ப்பித்தோர் அங்கு சமுகமாயிருக்கலாம். காலிக் கச்சேரி உதவி அரசாங்க அதிபரின் அலுவலக அறையில் கேள்விப்பத்திரங்களை இடுவதற்கான பெட்டி வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. காலி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப்பிரதிகளாகக் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இதனையிட்டுள்ள வேலைத் திட்டத்தையும் அது சம்பந்தமான முழு விபரங்களையும் அவரிடமிருந்தே பெற்றுக்கொள்ளலாம்.

3. அரசாங்க வேலை, நீர்ப்பாசனம், கல்வித் திணைக்களம் அல்லது காலி அரசாங்க அதிபரின்கீழ், அவ்வவ்வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்குப் பதிவுபெற்றுள்ள இவ்வித வேலைகளைச் சிறந்த முறையில் செய்துமுடிப்பதற்குத் தகுதியுள்ள கூட்டுறவு, கிராமாபிவிருத்திச் சங்கங்களும் அவ்வாறு பதிவு பெற்றுள்ள தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் இவ்வேலைகளுக்குக் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆயினும் அதற்கு அவ்வாறு பதிவு பெற்றுள்ளமை, தகுதிச் சாட்சிப் பத்திரம், ரூபா 25 ஐ கேள்வி வைப்புப் பணமாகச் செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டு ஆதியனவற்றை மேற்படி அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். 1973 ஒகத்து மாதம் 31 ந் தேதி பி. ப. 2.00 மணிவரை கேள்விக்குரிய படிவங்கள் வழங்கப்படும். பதிவு பெற்றுள்ள சங்கங்கள் கேள்வி வைப்புப் பணம் செலுத்தத் தேவையில்லை. ஆயினும் அவ்வச் சங்கங்களுக்குரிய திணைக்களங்களின் மாவட்டப் பிரதானிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகுதி சம்பந்தமான சாட்சிப் பத்திரத்தை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இதற்குரிய கேள்வி வைப்புப் பணத்தைக் காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியே வேறேதாவதொரு கச்சேரியில் அல்லது கொழும்புத் திறைசேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் " க்கான கேள்விப்பத்திரம் " எனக் குறித்து எல்லாக் கேள்விப் பத்திரங்களிலும் கையெழுத்திட்டு முத்திரை (சீல்) வைத்துப் பாதுகாப்பாக அனுப்புதல் வேண்டும்.

வை. டபிள்யூ. குணவர்தன,
உதவி அரசாங்க அதிபர்,
காலி அரசாங்க அதிபருக்காக.

காலிக்கச்சேரி,
1973 ம் ஆம் யூலை மாதம் 20 ந் உ.

அட்டவணை

| வேலை விபரம் | அமைந்துள்ள பிரதேசம் | பதிவு பெற்றிருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| 1. தன்வரவத்த குடியேற்றப்பாதை | ஹபராதுவ .. | 10,000 |
| 2. தாம்மல குடியேற்றக் களஞ்சியமும் குடியேற்ற உத்தியோகத்தர் காரியாலயமும் .. | ஹினிதும .. | 2,500 |
| 3. மெதகம குடியேற்ற உத்தியோகத்தர் இல்லம் .. | ஹினிதும .. | 2,500 |
| 4. தாம்மல குடியேற்ற உத்தியோகத்தர் இல்லத்தைப் பழுது பார்த்தல் .. | ஹினிதும .. | 15,000 |
| 5. பிட்டுவல இளைஞர் இயக்கத்தின் பிரவேசப் பாதையைப் பழுது பார்த்தல் .. | பெந்தர-எல்பிட்டிய | 3,000 |

7-89—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

இல. : இப/260 (72/73)

### காலிக் கச்சேரி—கேள்விப்பத்திரம் சம்பந்தமான அறிவித்தல்

காலி மாவட்டத்திலே, கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பு வேலைகளுக்கு 1973 ஒகத்து மாதம் 31 ந் தேதி பி. ப. 2.00 மணிவரை கொழும்பு (த. பெ. 500) காணிக்கொமிசனர் திணைக்களக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரினால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது அவைகளைச் சமர்ப்பித்தோர் அங்கு சமுகமாயிருக்கலாம். காலிமுக செக்ரடேரியட் கட்டிடத்தின் 3 ம் மாடியில் அமைந்துள்ள காணிக்கொமிசனர் அலுவலகத்தின் 320 ம் இலக்க அறையில் கேள்விப் பத்திரங்களை இடுவதற்கான பெட்டி வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. காலி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப்பிரதிகளாகக் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இதனையிட்டுள்ள வேலைத் திட்டத்தையும் அதுசம்பந்தமான முழு விபரங்களையும் அவரிடமிருந்தே பெற்றுக்கொள்ளலாம்.

3. அரசாங்க வேலை, நீர்ப்பாசனம், கல்வித் திணைக்களம் அல்லது காலி அரசாங்க அதிபரின்கீழ், அவ்வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்குப் பதிவுபெற்றுள்ள இவ்வித வேலைகளைச் சிறந்த முறையில் செய்துமுடிப்பதற்குத் தகுதியுள்ள கூட்டுறவு, கிராமாபிவிருத்திச் சங்கங்களும் அவ்வாறு பதிவு பெற்றுள்ள தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் இவ்வேலைகளுக்குக் குக் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆயினும் அதற்கு அவ்வாறு பதிவு பெற்றுள்ளமை, தகுதிச் சாட்சிப் பத்திரம், ரூபா 100 ஐக் கேள்வி வைப்புப் பணமாகச் செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டு ஆதியனவற்றை மேற்படி அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். 1973

ஒகஸ்து மாதம் 27 ந் தேதி பி. ப. 2.00 மணிவரை கேள்விக்குரிய படிவங்கள் வழங்கப்படும். பதிவு பெற்றுள்ள சங்கங்கள் கேள்வி வைப்புப் பணம் செலுத்தத் தேவையில்லை. ஆயினும் அவ்வச் சங்கங்களுக்குரிய திணைக்களங்களின் மாவட்டப் பிரதானிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட தகுதி சம்பந்தமான சாட்சிப் பத்திரத்தை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இதற்குரிய கேள்வி வைப்புப் பணத்தைக் காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியே வேறேதாவதொரு கச்சேரியில் அல்லது கொழும்புத் திறைசேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் " க்கான கேள்விப்பத்திரம்" எனக்குறித்து எல்லாக் கேள்விப் பத்திரங்களிலும் கையெழுத்திட்டு முத்திரை (வீல்) வைத்துப் பாதுகாப்பாக அனுப்புதல் வேண்டும்.

வை. டப்லியூ. குணவர்தன,
உதவி அரசாங்க அதிபர்,
காலி அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி, காலி,
1973 ம் ஆடு ஒகஸ்து மீ 20 ந் வ.

அட்டவணை

| ரு | வேலை விபரம் | அமைந்துள்ள பிரதேசம் | பதிவு பெற்றிருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|---|
| 1. | உடுவெல்ல அல்ல இகல வீதி .. | பத்தேகம | .. 50,000 |
| 2. | திவிலாணவத்த குடியேற்றப் பாதை .. .. | அக்மீமன | .. 25,000 |
| 3. | ஹல்விட்டிகல குடியேற்றத்தின் ஹினிதும குழாய் வேலைகளைப் பழுதுபார்த்தல் ... | ஹினிதும | .. 40,000 |
| 4. | கொக்கல தபால் காரியாலயம் .. | ஹபருதுவ | .. 25,000 |
| 5. | ஊறல அரலிய வீதி தாரிடுதல் .. | ஹினிதும | .. 60,000 |
| 6. | பொறகந்த வீதி தாரிடுதல் .. | அம்பலாங்கொடை .. | 25,000 |

7-88—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

**கச்சேரி, புத்தளம்**

பின்வரும் கட்டு வேலைகளுக்கு/திருத்த வேலைகளுக்கு பொறியிடப் பட்ட கேள்விப் பத்திரங்களை 21-8-73 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை புத்தளம் மாவட்ட அரசாங்க அதிபர் ஏற்றுக்கொள் வார்.

சிலாபத்திலுள்ள அரசமனைகளுக்குத் திருத்தங்கள்

2. புத்தளம் அரசாங்க அதிபரிடம் 20-8-73 ம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விப் பத்திரங்களை இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். புத்தளம் அரசாங்க அதிபரிடமிருந்து இவ்வேலைகள் தொடர்பான எல்லா விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங் களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் அங்கீகாரம் பெற்ற சங்கங்களும் மாத்திரம் கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதியுடையவராவர். ஒவ்வொரு ரூபா 10/- க்கும் கச்சேரிப் பற் றுச் சீட்டுகளைச் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திரங்களை அனுப்பக் கருதுபவர்களுக்குக் கேள்விப் பத்திர படிவங்கள் வழங்கப்படும். கிராம முன்னேற்ற சங்கங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்புப் பணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

3. கடித உறைகளில் "சிலாபத்திலுள்ள அரசமனைகளுக்குத் திருத்தங்கள் செய்வதற்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப் பிட்டு 21-8-73 ம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் புத் தளம் கச்சேரி அரசாங்க அதிபருக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும், இந்தத் திகதியில் இந்த நேரத்துக்கு பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக் கப்படும்.

4. 21-8-73 ம் திகதி மாலை 2.00 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் எல்லா கேள்விதாரர்களும் பிரசன்னமா யிருக்க அனுமதிக்கப்படுவர். ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விதாரர் வேலை நிறைவுக்கான ஒப்பந்த தொகையில் 5 சத வீதத்தை பிணை வைப்பாகச் செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும். அங்ஙனம் அறிவிக்கப்பட்ட 10 தினங்களுக்குள் அவ்விதம் செய் யத் தவறுபவர் கேள்வி வைப்புப் பணத்தை இழப்பார்.

5. செய்து முடித்த வேலையின் 90 சத வீதம் வரை பணம் கொடுப்பனவு செய்யப்படும். மிகுதிப் பணமும் பிணை வைப்புப் பணமும் வேலை நிறைவெய்தியதிலிருந்து மூன்று மாதங்களின் பின்னர் கொடுக்கப்படும்.

ப. சு. விஜேவீர,
அரசாங்க அதிபர், புத்தளம் மாவட்டம்.

கச்சேரி,
புத்தளம்.
19-7-73.

8-11—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

**காணி அபிவிருத்தித் திணைக்களம்**

கெற்றிபொல கிராம வைத்தியசாலைக்கு மின்பிறப்பிக்கும் கருவி யொன்று நிறுவுவதற்கும், வழங்குவதற்குமான கேள்விப்பத்திரங் கள்—மாத்தளை மாவட்டம்

மேற்குறிப்பிட்ட சேவை தொடர்பான கேள்விப்பத்திரங்களை 1973.08.17 ஆந் திகதி மு. ப. 11.00 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார். கேள்விக்காரர் முன்னைய கையிருப் பைக் குறிப்பிடலாம்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி 1973.08.16 நண்பகல் 12.00 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபி விருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப் பத்திரங்க ளைச் சமர்ப்பிக்கலாம்.

3. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "கெற்றிபொல வைத்திய சாலைக்கு மின் பிறப்பிக்கும் கருவியொன்று நிறுவுதற்கும் வழங்கு வதற்குமான கேள்விப்பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்று முகவரியிட்டு அனுப்பப் பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறை யின் இடதுபக்க கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல் லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் மூல மும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனு மதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்றமுடியாத வையுமாகும். கேள்விப் பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவை களைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

6. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விவரங் களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்டவேண் டும்.

7. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது, தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

8. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1973.08.17 ம் திகதி முற்பகல் 11 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

9. கேள்விப் பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபணையற்ற உரிமையுண்டு.

10. மேலதிகத் தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
23.7.1973.
சிசி/2/369

7-86—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### பொலன்னறுவை மாவட்டத்தில் இயந்திரங்களை உபயோகித்துக் காடு துப்பரவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள்

குறிக்கப்பட்டுள்ள பின்வரும் பிரதேசங்களில் இயந்திரங்களை உபயோகித்துக் காடு துப்பரவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை 24.8.73 முற்பகல் 11.00 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்ளுவார். இவ்வாறு துப்பரவு செய்தலில் களைதல், கட்டை பிடுங்கல், எரித்தல், மட்டமாக்குதல், வரம்பிடல், விரயமானவைகளை ஒதுக்குதல் முதலியன அடங்கும்.

| மாவட்டம் | திட்டம் | சரியான அளவு |
|---|---|---|
| பொலன்னறுவை | பிம்புறுத்தாவ | 600 ஏக்கர் |

2. சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதியால் அல்லது கச்சேரி நில அளவையாளரால் துப்பரவு செய்ய வேண்டிய துண்டுகளின் எல்லைகள் சுட்டிக்காட்டப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மாதிரிப்படத்திலும் நிலத்திலும் இத்துண்டுகளின் எல்லைகள் ஒருதரம் குறிக்கப்பட்டால் இவ்வெல்லைகளுக்குள் எல்லா வேலைகளும் செய்யப்படவேண்டும். இவ்வெல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசத்திற்கான வேலைகளுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 200 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்பிற்கு வெளியிலாயின் எந்தவொரு கச்சேரியிலோ செலுத்தி 23.8.73 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இருபிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. எல்லாக் கேள்விப் பத்திரங்களிலும் "பொலன்னறுவை மாவட்டத்தில் பிம்புறுத்தாவ திட்டத்தில் இயந்திரங்களை உபயோகித்துக் காடு துப்பரவு செய்வதற்கான கேள்விப் பத்திரம்" என கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும், முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அஞ்சல் மூலமாயின் பதிவு அஞ்சலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவரி மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

5. கேள்விகள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப் பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

6. கேள்விகளை ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

7. தேர்வுபெற்ற கேள்விக்காரர் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து பிணைப்பணம் செலுத்தவும், ஒப்பந்தத்திற் கைச்சாத்திடவும் தவறுமிடத்து அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாத தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலிற் சேர்க்கப்படுவர்.

8. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 24.8.73 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகம்கொடுக்கலாம்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் சம்பந்தப்பட்ட பிரிவிலுள்ள மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெறக்கூடிய ஒப்பந்தப் படிவத்தைக் கவனமாக வாசிப்பதுடன், தேவையாயின் கச்சேரியிலிருந்து அவசியமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

10. அரசாங்கமானது எல்லாக் கேள்விகளையும் அல்லது எந்தக் கேள்வியையும் தள்ளுபடி செய்யுமுரிமையையும் ஒரு கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கும் உரிமையையும் தனக்கு எவ்வித ஐயப்பாடுமின்றி ஒதுக்கியுள்ளது.

11. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசாங்க அதிபருடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டும்.

12. எந்த ஒப்பந்தமும் உரிய அதிகாரமின்றிப் பிறருக்குச் சாட்டுதல் செய்யப்படவோ அல்லது உபவாடைக்கு விடப்படவோ ஆகாது. ஓர் ஒப்பந்தக்காரர் வேறெவருக்கேனும் தனது சார்பில் ஒப்பந்தத்தை நடாத்துமாறு அதிகாரமளிக்கும் தத்துவ உரிமையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உரிமையை அரசாங்கம் தனக்கு ஒதுக்கியுள்ளது.

13. அரசாங்க அதிபர் ஆகியவர் தனக்குப் போதுமானதெனக் காணும் காரணங்களுக்காக, ஒப்பந்தகாரர் ஒருவர் வேலைக்கமர்த்தும் எவருக்குமெதிராக மறுப்புத் தெரிவித்து எழுத்துமூல அறிவித்தல் கொடுக்கலாம். அத்தகைய ஒருவரை ஒப்பந்தகாரர் வேலைக்கமர்த்தலாகாது.

14. முன்னர் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்திராத ஒரு கேள்வியாளர் கேள்விப்படிவங்களுக்கு விண்ணப்பிக்கும்போது தனது முழுப்பெயர், நிரந்தர விலாசம், தனக்கு எந்த மாவட்டம் அல்லது மாவட்டங்களில் காணிச் சொத்து அல்லது சோந்தை இருக்கின்றது என்பதைக் கூறி ஓர் எழுத்துமூலக் கூற்றைப் படிவங்கள் வழங்கும் உத்தியோகத்தருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். காணியின் பரப்பளவும் பிற சோந்தைகளின் தன்மையும் பரப்பளவும் கொடுக்கப்படல் வேண்டும். வேறு எந்தத் திணைக்களத்துடனும் அரசாங்க ஒப்பந்தத்தை நிறைவேற்றியுள்ள கேள்வியாளர் ஒருவர் அத்திணைக்களத்தின் பெயரையும் எந்த மாவட்டத்தில் அச்சேவை செய்யப்பட்டதென்பதையும் கூறல் வேண்டும்.

15. கேள்விக்காரர் பணங்கட்டியதற்குரிய பற்றுச்சீட்டைப் பத்திரமாக வைத்திருந்து பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைக் கேள்விப் பத்திரங்களுடன், இணைக்கக்கூடாது.

16. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக்கொடுக்க வேண்டும்.

17. மேலதிகத் தகவல்கள் ஏதாவது வேண்டுமாயின் அவைகளைக் காணி அபிவிருத்தி அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

உ. ஆ. குணரத்தின,
காணி அபிவிருத்தி அதிபர்.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 23 ந் உ.
சிசி/1/475

7-85—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

## சுகாதாரத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் எதிராகக் கொடுக்கப்பட்ட காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும். அத்துடன் தங்களிடம் கொந்தராத்து கொண்டு நடத்துவதற்கு ஏற்ற முதலும் சேவையாளர்களும் இருப்பது என்பதையிட்டு காரியாதிகாரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற அத்தாட்சிப்பத்திரம் ஒன்று அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவைகளை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவிருக்கும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்காணும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம் :—சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயங்கள், அநுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, குருணாகல். கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு முன்தினம் நண்பகல் 12 மணிக்குப் பின் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ, அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்கநேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையையும். இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது என்னிடமோ அல்லது கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையில் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டு "பி" அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தில் அட்டவணை "சீ" யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருள்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையில் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்படிவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. **அரிசி.**—நோயாளிகளாலும், வேலையாட்களினாலும் ஒப்படைக்கப்பட்ட கூப்பன்களின் பொருட்டு உணவுத் திணைக்களத்திலிருந்து உதவிப் பண விகிதத்தில் அல்லது இலவசமாக அரிசி 19.12.66 ல் இருந்து பெறக்கூடியதாக அனுமதிச்சீட்டு நிலையத் தலைவரால் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படும்.

யாழ்ப்பாணம்,
7.7.73.

பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவை அத்தியட்சகர்.

குறித்த அட்டவணை

| 1 | 2 | 3 | 4 | 5 | | | | | | | | 6 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தாபனங்கள் | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விக் காலம் | உணவுகள் அண்ணளவான தொகைகள் | | | | | | | | கேள்விகள் கூடப் படும் திகதி |
| | | | | வேலைக்காரர்கள் | | | | நோயாளிகள் | | | | |
| | | | | மீன் | கருவாடு | முட்டை | காய்கறி | மீன் | கருவாடு | முட்டை | காய்கறி | |
| 1. கரவெட்டி, பி. வி. | 100 | 300 | 1.9.73—31.12.73 | 40 | 60 | 40 | 125 | 20 | 20 | 20 | 40 | 14.8.73 |
| 2. பளை, இ. வை. | 100 | 600 | ஷை | 110 | 190 | 110 | 290 | 250 | 420 | 250 | 920 | ஷை |
| 3. அக்கராயன் குளம், இ. வை. | 100 | 600 | ஷை | 250 | 590 | 250 | 790 | 290 | 1000 | 290 | 1000 | ஷை |
| 4. செம்பியன்பற்று, இ. வை. | 100 | 600 | ஷை | 310 | 670 | 310 | 830 | 290 | 500 | 290 | 830 | ஷை |

7–58—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

**கச்சேரி, கண்டி**

*கீழ்க்கண்ட வேலைக்கான சில் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கண்டி அரசாங்க அதிபரினால் 1973.08.31 ஆம் திகதி பிற்பகல் 2 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.*

*(1) கலகெதர தீப்பெட்டி தொழிச்சாலைக் கட்டிடம் அமைத்தல்.*

*(2) கண்டி அரசாங்க அதிபரிடமிருந்து 06.08.73 தொடங்கி 25.08.73 ஆம் திகதி வரை பெறக்கூடிய கேள்விப் பத்திரங்களில் இணைப்பிரதியில் அனுப்பப்படல்வேண்டும்.*

*(3) அரசாங்கத்தில் பதிவு செய்த கொந்தராத்துக்காரர்களும் அனுமதிக்கப்பட்ட சங்கங்களும் கேள்விப் பத்திரங்கள் அனுப்பலாம். எந்த ஒரு கச்சேரி, இலங்கை வங்கிக் கிளையில் கட்டுப்பணமாக ரூபா 50 கட்டியதற்கு அத்தாட்சியாக பற்றுச்சீட்டு சமர்ப்பித்தால் மட்டும் கேள்விப் பத்திரங்களும், கட்டிடப்படம் அமைக்கும் முறைகளும் வழங்கப்படும். அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் கட்டுப் பணம் கட்டத் தேவையில்லை.*

*(4) கேள்விப் பத்திரங்கள் 31.08.73 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக கண்டி அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படல் வேண்டும். கவரின் இடது பக்க மேல்மூலையில் "கலகெதர தீப்பெட்டி தொழிற்சாலைக் கட்டிடம் அமைத்தல் கேள்விப் பத்திரம்" என்று குறிப்பிடப்படல் வேண்டும். குறிப்பிட்ட நேரத்துக்குப் பின்பு கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*(5) கேள்விப் பத்திரங்கள் 31.08.73 பிற்பகல் 2 மணிக்குத் திறக்கப்படும். அத்தருணத்தில் கேள்விக்காரர்கள், பிரசன்னமாக இருக்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள், கேள்விப் பணத்தின் பத்து வீதத்தை (10%) பிணைப்பணமாகக் கட்டுதல் வேண்டும். அவ்வாறு அறிவித்து ஏழு நாட்களுக்குள் பிணைப்பணம் கட்டத் தவறின், கேள்விக் கட்டுப்பணம் அபகரிக்கப்படும்.*

*(6) செய்த வேலையின் பெறுமதியில் தொண்ணூறு வீதம் (90%) மட்டும் கொடுப்பனவு செய்யப்படும். மிகுதி, வேலை செய்து முடிந்து ஆறு மாதத்திற்குப் பின்பு கொடுக்கப்படும்.*

*(7) இதுபற்றிய மேலதிக விபரங்கள் கண்டி கச்சேரியில் (திட்டமிடும் பகுதி) அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.*

*எஸ். மாரலந்தை,*
*அரசாங்க அதிபர், கண்டி.*

*கச்சேரி,*
*கண்டி,*
*1973 ம் ஆண்டு யூலை மாதம் 23 ந் திகதி.*

7–98—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

**கேள்விப்பத்திர முடிவுகள்—பொலிஸ் திணைக்களம்**

கீழ்க்காணும் பொருட்களின் பொருட்டு 1973.4.19 ம் திகதி திறக்கப் பட்ட கேள்விப்பத்திரங்கள் :

| பொருட்கள் | கிடைக்கப் பெற்ற கேள்விப்பத்திரத் தொகை | ஏற்றுக்கொள்ளப் பட்ட விலை (ஒன்றுக்கு) |
|---|---|---|
| பொத்தான்கள் (எல்லா இனங்களும்) | 2 | எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை |
| நட்சத்திர அடையாளம் (உத்தியோகத்தருக்குரியது) | 3 | ரூ. 1.20 |
| நட்சத்திர அடையாளம் (பெரியது) | 4 | ரூ. 1.00 |
| முடி அடையாளம் (உத்தியோகத்தருக்குரியது) | 4 | .90 சதம் |
| முடி அடையாளம் (சார்ஜன் மாருக்குரியது) | 4 | .80 சதம் |

தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர்—எம். எம். அன்சார் மொஹிதீன், 2, ஒபர்ன்சயிட், தெஹிவளை.

ஜீ. புஞ்சிமஹத்மயா,
பொலிஸ் மா அதிபருக்காக.

பொலிஸ் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1, 1973 ந் ஆண்டு ஜூலை மீ 24 ந் உ.

8–229—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71.

**கேள்விப்பத்திர முடிவுகள்—பொலிசுத் திணைக்களம்**

*2000 இயந்திரத் துப்பாக்கித் தாங்கல்கள் வழங்குதல்*
*முடிவு திகதி 29.6.1973*

1973 ஜூன் மாதம் 8 ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியால் அறிவிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் சம்பந்தமாக 6 கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்களால் மொத்தம் 6 விலைகள் சமர்ப்பிக்கப்பட்டன. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பதாரரின் விபரம் பின்வருமாறு ;

கே. எம். நோமிஸ் சில்வா அன்ட் சன்ஸ்,
27, வேல்ஸ்குமார மாவத்தை,
கொழும்பு-14.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை இயந்திரத் துப்பாக்கித் தாங்கல் ஒன்றுக்கு ரூ. 4/95.

ஜீ. புஞ்சிமஹத்மயா,
பொலிசுத் தலைவருக்காக.

பொலிசுத் தலைமை அலுவலகம்,
கொழும்பு-1,
1973 ஜூலை மாதம் 24 ம் திகதி.

8-228—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

**சுகாதார இலாகா**

*ஏலவிற்பனை—பாவிக்க முடியாத குளிர்சாதனப் பெட்டியும் பிரதி செய்யும் யந்திரமும்*

கீழ்க்குறிக்கப்பட்டுள்ள குளிர் சாதனப் பெட்டிகளும் பிரதி செய்யும் இயந்திரமும் 1973 ம் ஆண்டு ஆவணி மாதம் 28 ந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு அரசினர் பொது வைத்திய சாலையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

1. இங்கிலாந்தில் செய்யப்பட்ட மின்சார குளிர்சாதனப் பெட்டி —1
2. எல். ஈ. சீ. குளிர் சாதனப்பெட்டி (ஈ. என். டபிள்யூ. 7/22 மாதிரி)-1
3. "ஜெஸ்ரெனர்" கையால் இயங்கும் பிரதி செய்யும் இயந்திரம்—1

விற்பனைக்குரிய சாமான்களை 1973 ம் ஆண்டு ஆவணி மாதம் 27 ந் திகதி காலை 8.00 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரையும் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் பார்வையிடலாம்.

விற்பனை முடிந்ததும், விற்பனையான சாமானுக்குரிய பணம் செலுத்தப்படுவதுடன், அன்று பி. ப. 3.30 மணிக்குமுன் சாமானை அப்புறப்படுத்தல் வேண்டும். அவ்விதம் விற்பனையாகிய அப்புறப் படுத்தப்படாத எந்த சாமானுக்கும் இந்த இலாகா பொறுப்பேற்க மாட்டாது.

வைத்திய கலாநிதி வி. சிங்கநாயகம்,
சுகாதார சேவை அத்தியட்சகர்,
மட்டக்களப்பு.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
மட்டக்களப்பு. 20. 7. 73.

8-249—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

**பிரசித்த ஏலவிற்பனை**

*நீதிமன்றம், கிளிநொச்சி*

இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருவது என்னவென்றால் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள கோட்டால் அறவிடப் பட்டதும், சொந்தக்காரரால் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் கோரப்படாததுமான கிளிநொச்சி நீதிமன்றத்தில் சேர்க்கப் பட்டுள்ள பொருட்கள் 1973 ஆவணி மாதம் 17 ம் திகதி காலை 9.30 மணியளவில் கிளிநொச்சிக் கோட்டில் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணப் பிரதேச பரிபாலன செயலாளர் திரு. கே. சிவாத்தினம் முன்னிலையில் விற்கப்படும்.

விற்பனைப் பொருட்களை அன்று காலை 8.30 மணி தொடக்கம் காலை 9.30 மணி வரைக்கும் கோட்டில் பார்வையிடலாம்.

விற்பனையில் வாங்கிய பொருட்களை வாங்கியவர்கள் விற்பனை முடிவடைந்ததும் உடனடியாக கொண்டு செல்லுதல் வேண்டும்.

| வழக்கு இலக்கம் | பொருள் விபரம் |
|---|---|
| 7386 | ...ஒரு றலி சைக்கிள் இல. சி. எவ். 2207 டைனமோ, மணி உட்பட. |
| 7767 | ...ஒரு சைக்கிள் இல. டி. எவ். 13906 |
| ஏ. 191/70 | ...சைக்கிள் கைபிடியும், சட்டமும் (பிறேம்) இல. ஏ. சி. 10628. |
| | சைக்கிள் கைபிடியும், சட்டமும் (பிறேம்) இல. சி. என். 71815. |
| ஏ. 241/71 | ...ஒரு றலி சைக்கிள் இல. ஏ. என். 44889. |
| ஏ. 266/71 | ...ஒரு கம்பர் சைக்கிள் இல. பி .எச். 21606. |
| ஏ. 334/71 | ...ஒரு றலி சைக்கிள் இல. 70 சி. 136 |
| 10702 | ...ஒரு றலி சைக்கிள் இல. சி. இ. 1866, மணி, பயணப்பொதிகாவியுடன் |
| ஏ. 273/72 | ...ஒரு றலி சைக்கிள் இல. பி. கே. 61756. |
| ஏ. 271/72 | ...ஒரு பி. எஸ். ஏ. சைக்கிள் சட்டம் (பிறேம்) இல. இ. டபிள்யூ. 514. |
| ஏ. 278/72 | ...ஒரு றலி சைக்கிள் சட்டம் (பிறேம்) இல. ஏ. பி. 17746. |
| ஏ. 320/72 | ...ஒரு றலி சைக்கிள் இல. ஏ. வை. 19777 பயணப்பொதிகாவியுடன். |
| ஏ. 16/70 | ...ஒரு லொறிச் சக்கரம் ரயர் உடன், இல. 0493. |
| ஏ. 329/72 | ...ஒரு கப்பி. |
| ஏ. 15/70 | ...ஒரு டமாஸ் மணிக்கூடு இல. 66451. |
| ஏ. 894 | ...ஒரு றோமர் மணிக்கூடு. |
| ஏ. 174/72 | ...ஒரு சோடி தங்க வளையல்கள். |
| 10929 | ...ஒரு பித்தளை விளக்கு. ஒரு பித்தளைக் கைபிடியுடைய விளக்கு (தூண்டாமணி). |

நீதவான்.

நீதிமன்றம்,
சாவகச்சேரி, 23.7.73.

7-81—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

## நீதவான் மன்று—வவுனியா

### ஏலவிற்பனை

பின்வரும் பறிமுதல் செய்யப்பட்டதும் கோரப்படாததுமான பொருட்கள் 10.8.73 ஆம் தேதி பி. ப. 2.00 மணிக்கு அனுராதபுரம் பிரதேச நீதிமன்றங்கள் நிருவாகச் செயலாளர் முன்னிலையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் விற்கப்படும் இப்பொருட்கள் அன்று காலை 10 மணி முதல் 12.00 மணிவரை நீதிமன்ற வளவில் பார்வைக்காக வைக்கப்படும். ஏலத்தில் இப்பொருட்களை வாங்குவோர் அவற்றிற்கான பணத்தை உடன்கொடுத்து அவற்றை அப்பொழுதே அப்புறப்படுத்துதல் வேண்டும். ஏலத்தில் வாங்கும் பொருட்களுக்குக் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

சி. ஆனந்தக்குமாரசுவாமி,
நீதவான்—வவுனியா.

வவுனியா,
1973 ம் ஆடு யூலை மீ 17 ந் உ.

| வழக்கிலக்கம் | | பொருட்களின் விபரம் |
|---|---|---|
| | 47344 | .. 1 வாளி |
| | 47344 | .. 1 வாளி |
| பி. ஆர் | 156 | .. 1 வாளி |
| பி. ஆர் | 108 | .. 1 வாளி |
| | 47259 | ஷை |
| | | ஷை |
| | 46933 | 1 சாடி |
| | | 1 பிளாஸ்டிக் சாடி |
| | 51579 | 1 பிளாஸ்டிக் சாடி |
| | | 1 பெரிய சாடி |
| | | 1 வாளி |
| | 52006 | 1 பழுதடைந்த பால் கேன் |
| | 47822 | 1 கலன் டின் (பழையது) |
| | 47819 | ஷை (பழையது) |
| | 46525 | 1 பித்தளைக் கலம் |
| எ | 40/16/70–71 | ஷை |
| பி. ஆர் | 180 | 1 சிறிய பித்தளைக் கலம் |
| | 51573 | 1 வெள்ளிச் சிகரம் |
| | | 1 சிறிய பித்தளைக் கோப்பை |
| | | 1 பழுதடைந்த அலுமினியக் கலம் |
| | 47295 | ஷை |
| எ | 248/71 | 1 பழுதடைந்த பழைய சிமினி இல்லாத கண்ணாடி விளக்கு |
| | | 1 பழுதடைந்த பழைய கண்ணாடி விளக்கு |
| | | ஷை |
| | | ஷை |
| | 47419 | 1 பழுதடைந்த பெற்றோல்மக்ஸ் விளக்கு |
| | | ஷை |
| | 46666 | 1 கேத்தல் |
| | 46769 | 1 குப்பி விளக்கு |
| | | 2 கதவு பூட்டுகள் |
| | | 5 உளிகள் |
| எ | 94 | 1 ஸ்பெனர் |
| | 47643 | 1 போத்தில் விளக்கு ஒன்றின் போத்தில் ஒன்று |
| | 45169 | 1 சிமினி |
| | 48712 | 1 வெறும் டின் |
| | 46019 | ஷை |
| | 46863 | 1 சிறிய இனமல் பேசின் |
| | | 2 சிறிய இனமல் கோப்பைகள் |
| | | 1 குளவி |
| | | 1 கறிகேன் கண்ணாடி விளக்கு |
| | | 1 மேசை விளக்கு சிமினி |
| பி. ஆர் | 1 | 1 மண்வெட்டி. |
| | | 1 சிறிய மண்வெட்டி |
| | 52142 | 1 மண்வெட்டி |
| | 46560 | 1 மண்வெட்டி |

| வழக்கிலக்கம் | | பொருட்களின் விபரம் |
|---|---|---|
| எ | 119/50 | 1 மண்வெட்டி |
| | 48715 | 1 மண்வெட்டி |
| பி. ஆர் | 33 | 1 உளி |
| | 51441 | 1 நீண்ட பிடியுள்ள கத்தி |
| | பி. ஆர். 9 | ஷை |
| | 46048 | ஷை |
| | | ஷை |
| | | ஷை |
| | | ஷை |
| | | ஷை |
| | | ஷை |
| | | ஷை |
| | | ஷை |
| | 44447 | ஷை |
| | 47304 | 1 கத்தி |
| | 45411 | 1 மன்னா கத்தி |
| | | 1 கத்தி |
| | | 1 கத்தி |
| | | 1 கத்தி |
| பி. ஆர். | 5 | 1 கத்தி |
| | | 1 நீண்ட பிடியுள்ள கத்தி |
| எ | 122/73 | 5 றலி துவிச்சக்கரவண்டி இல. ஈ.கியூ. 2713 |
| எ | 123/73 | 1 றலி துவிச்சக்கரவண்டி இல. சீ.வை.யூ. 1728 |
| எ | 14/73 | 1 றலி துவிச்சக்கரவண்டி இல. ஈ.ஈ. 322 |
| எ | 49/73 | 1 பழுதடைந்த துவிச்சக்கரவண்டி இல. ஏ.ஜே. 94847 |
| | 47354 | 1 கர்கியுலஸ் துவிச்சக்கரவண்டி இல. ஈ. 12163 |
| | | 1 றலி துவிச்சக்கரவண்டி இல. ஏ.ஈ. 80334 |
| எ | 476/69 | 1 றலி துவிச்சக்கரவண்டி இல. ஏ. 25306 |
| எ | 8/70 | 1 கம்பர் துவிச்சக்கரவண்டி இல. ஈ. பி. 1976 |
| | 46543 | 1 றலி துவிச்சக்கரவண்டி இல. டீ.எப். 14263 |
| எ | 47/72 | 1 பழுதடைந்த துவிச்சக்கரவண்டி இல. பீ.ஏ. 8714 |
| | 47822 | 1 கர்கியுலஸ் துவிச்சக்கரவண்டி இல. டீ.பி. 8267 |
| | | 1 றலி துவிச்சக்கரவண்டி அமைப்பு இல. ஈ.பீ. 272 |
| | | 1 றலி துவிச்சக்கரவண்டி அமைப்பு இல. சீ.ஐ. 531 |
| | | 1 றலி துவிச்சக்கரவண்டி அமைப்பு இல. ஏ.எச். 20285 |
| | | 1 றலி துவிச்சக்கரவண்டி அமைப்பு இல. டீ. 220 |
| | | 1 றலி துவிச்சக்கரவண்டி அமைப்பு இல. ஏ. எம். 59250 |
| | | 1 பலகை–உருக்கு துவிச்சக்கரவண்டி லக்கேச் கரியர் |
| | | 1 பழைய தொங்கும் தராசு |
| | | 1 உடைந்த—பழைய தொங்கும் தராசு |
| | | 1 றுத்தல் தராசு படி—½ றுத்தல் தராசு படி 2 |
| | | 2 அரிவாள் |
| | | 5 மாடு குறிசுடு அச்சு |
| | 49181 | 1 பழைய இறப்பர் சீட்டு—1 வெறும் வண்ணக் குழப்பு டின், 1 பாவிக்கப்பட்ட தூரிகை |
| | 45602 | 1 அலுமினிய பாண்டம், 1 வெறுமை டொபி டின் |
| | 46666 | 1 சிறிய கை வாள் |
| | | 1 டிரெக்டர் றெஸ்ட் |

7–51—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

## ஏல விற்பனைகள்

இல. 28, றெஸ்மீட் பிளேஸில் உள்ள 38·25 பேர்ச்சஸ் வீடு வளவு ஆதனம் வருகிற 29.8.1973 காலை 9.00 மணியளவில் எனது அறையில் ஏல விற்பனைக்கு வரவிருக்கின்றது.

மேற்கொண்டு விபரங்களுக்கு கீழ்க் கையொப்பமிட்டுள்ளவருடன் தொடர்பு கொள்ளவும்.

ஈ. எம். ஜீ. திலகரத்தின,
பிரதி ஆணையாளர்.

தொலைபேசி எண் : 24610,
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
புதிய செயலகம்,
குடியரசுச் சதுக்கம்,
கொழும்பு 1..

8–356—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11.00 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்ரறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெ யீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 0 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 0 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 0 | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 25.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 1.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 8.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 15.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 22.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.